Persatuan Pengguna Pulau Pinang
Consumers Association of Penang
槟城消费人协会 பினாங்கு பயனீட்டாளர் சங்கம்

10 Jalan Masjid Negeri, 11600 Pulau Pinang, Malaysia
Tel: 604-8299511 Fax: 604-8298109
email: consumerofpenang@gmail.com

Websites
Bahasa:
www.pengguna.org.my
English:
www.consumer.org.my
Chinese:
www.cap.org.my

பத்திரிக்கை செய்தி 25.8.20

# பினாங்கு பெர்ரி சேவை அரச விசாரணை கமிஷன் தேவை பினாங்கு பயனீட்டாளர் சங்கம் வேண்டுகோள்.

தொழில்நுட்ப கோளாறு என காரணம் காட்டி, கடந்த 120 ஆண்டுகளாக பட்டர்வொர்த்துக்கும், பினாங்கு தீவுக்கும் சுகமான போக்குவரத்து சேவையை வழங்கிவந்த பினாங்கு பெர்ரி சேவை இரண்டு நாட்களுக்கு அதன் சேவை தொடராது என அறிவிக்கப்பட்டது தொடர்பாக அரச விசாரணை கமிஷன் தோற்றுவிக்க ப்பட வேண்டும் என பினாங்கு பயனீட்டாளர் சங்கம் அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த பெர்ரி போக்குவரத்து சேவையை பயன்படுத்துபவர்களில் பெரும்பாலானவர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என்பதை பெர்ரி சேவை நிறுவனம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும் என பி.ப.சங்க தலைவர் முகைதீன் அப்துல் காதர் கூறினார்.

தினமும் ஆயிரக்கணக்கான பாதசாரிகள் பெர்ரியை பயன் படுத்தி வருகின்றனர். அவர்களின் சுமையை தீர்ப்பதாக கூறி, இலவச பேருந்து வசதியை ஏற்படுத்தி கொடுப்பதால், இந்த பிரச்சினை தீர்ந்து விடாது. சரியான நிர்வாக திறமை இல்லாமல் இருப்பதே இதற்கு காரணம்.

கடந்த ஜூலை மாதம்தான் 5 பெர்ரிகள் செயல் இழந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. ஒரே ஒரு பெர்ரி மட்டும் சேவையில் ஈடுபட்டது. அந்த பெர்ரிக்காக, ஒருவர் ஒரு மணி நேரம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை..

கடந்த 2019ம் ஆண்டில், 1.54 மில்லியன் பாதசாரிகள் பெர்ரியை பயன்படுத்தி இருந்தனர். 0.25 மில்லியன் வெவ்வேறான வாகனங்களையும் பெர்ரி ஏற்றிச் சென்றுள்ளது அதே ஆண்டில்.

ஆகவே 2017க்கு முன் எப்படி பினாங்கு பெர்ரி சேவை, பினாங்கு துறைமுக வாரியத்தின் கீழ் செயல் பட்டதோ, அதே போல், மீண்டும் செயல்பட வேண்டும் என பி.ப.சங்கம் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

ஒரே ஒரு பெர்ரியை வைத்து கொண்டு இதுதான் பினாங்கு பெர்ரி சேவை என தம்பட்டம் அடிக்கக்கூடாது.

ஆகவே எற்பட்ட இப்பிரச்சினை தொடர்பாக, அரச விசாரணை கமிஷன் தோற்றுவிக்கப்பட வேண்டும் பி.ப.சங்கம் கேட்டுக்கொள்வதாக முகைதீன் தெரிவித்தார்.

முகைதீன் அப்துல் காதர்
தலைவர்
பினாங்கு பயனீட்டாளர் சங்கம்.